**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் 262/2019**

**பிரதிவாதி தரப்பு சாட்சி-1 ஜோதிலட்சுமி திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 06.02.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) தாவா சொத்தின் சர்வே எண் தெரியும். என் தந்தை இறந்து எட்டு வருடங்கள் ஆகிறது. என் தகப்பனாருக்கு இரண்டு மனைவியர். முதல் மனைவி பெயர் அஞ்சலை, இரண்டாவது மனைவி செல்லாயி ஆவார்கள். அஞ்சலை எப்போது இறந்தார் என்றால் அவர் என் தாயார். அவர் இறந்து 15 வருடங்கள் ஆகிறது. செல்லாயி உயிருடன் இருக்கிறாரா என்றால் என் தாயாருக்கு முன்பே இறந்துவிட்டார். என் தாயார் உயிருடன் இருக்கும்போதே என் தகப்பனார் இரண்டாம் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். அவர் என் தாயாரின் சகோதரி. செல்லாயி என் தகப்பனாருக்கு சட்டப்படியான மனைவி அல்ல என்றால் சரிதான். அஞ்சலைக்கு 2 பெண், 2 ஆண் மக்கள். வாதி மாறன்அஞ்சலைக்கு 2 ம் குழந்தை. மற்றொரு மகன் வடிவேல். நான் மற்றும் செல்லம்மாள் இருவரும் மகள்கள் ஆவோம்.

2) செல்லாயி மற்றும் என் தகப்பனாருக்கு அண்ணாதுரை என்ற ஒரு மகன் உண்டு என்றால் சரிதான். அண்ணாதுரை சட்டப்படியான மகன் என்றால் சரிதான். எனக்கு சுமார் 32 ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடந்தது. என் அக்காவிற்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் சுமார் 40, 45 ஆண்டுகள் இருக்கும். எனக்கும், என் அக்காவிற்கும் என் பெற்றோர் மற்றும் உடன்பிறந்தவர்கள் இருந்துதான் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள கிராமம் சூரியனூர் கிராமம் மேலப்பட்டி. எனக்கு திருமணமானது சூரியனூர் கிராமம் பாறைப்பட்டி ஆகும். நான் என் கணவருடன் பாறைப்பட்டியில் வசிக்கிறேனா என்றால் சரியல்ல மேலப்பட்டியில் வசிக்கிறேன். மேலப்பட்டியில் யார் வீட்டில் குடியிருக்கிறேன் என்றால் என் தகப்பனார் நத்தம் புறம்போக்கில் பட்டா வாங்கியுள்ளார். அந்த இடத்தில் வசிக்கிறேன். அந்த இடத்தை என் தகப்பனார் எனக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார்.

**வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**

Kulithalai.